Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 453 /2024

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | இளவரசி | Calling: | இல்லத்தரசி |
| Husband's Name: | கே.ஜீ.சேகர் | Religion: | |
| Village: | சான்றோர் குப்பம் | Age: | 55 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 18.11.2025 நேரம் : 12.55 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.1 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கபட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

என் கணவருக்கு ஏற்பட்ட விபத்து யாருடைய தவறினால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருக்கும் போது தான் போலிசார் வந்து என்னிடம் நடந்தது குறித்து எழுதிக்கொண்டு கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் அந்த கையொப்பம் தான் நீதிமன்றத்தில் காண்பித்த கையொப்பம் என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்டதாளில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் கணவருக்கு ஏற்பட்ட விபத்துக்காக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இழப்பீட்டை பெற வேண்டும் என்பதற்காக தான் நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் என்றால் சரிதான். விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதையினால் தான்

ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரத்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) இளவரசி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.18 18:28:04 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 453 /2024

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –2

| | | | |
|---|---|---|---|
| Name: | கே.ஜீ.சேகர் | Calling: | வியாபாரம் |
| Father's Name: | கோபால் | Religion: | |
| Village: | சான்றோர் குப்பம் | Age: | 59 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 18.11.2025 நேரம் : 01.08 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.2 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கபட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து நடந்த இடத்திற்கு ஒரு பத்து மீட்டர் தொலைவில் ஒரு சுங்கசாவடி உள்ளது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய காரின் பதிவெண், அதை ஓட்டிய வந்த நபர் குறித்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் பாதையை கடப்பதற்கான வழியோ வாகனங்கள் வளைவதற்கு வளைவோ இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் சென்டர் மீடியேசனுக்கு மிக அருகில் என்றால் சரிதான். 10 மீட்டர் தொலைவில் சுங்க சாவடி உள்ளதால் வாகனங்கள் வேகமாக வர வாய்ப்பில்லை என்றால் சரிதான். சென்டர் மீடியேசனில் இருந்து நான் தீடிரென இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட விபத்துக்காக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இழப்பீட்டை பெற வேண்டும் என்பதற்காக தான் நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் என்றால்

சரிதான். விபத்தானது எனது அஜாக்கிரதையினால் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) கே.ஜீ.சேகர்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.18 18:28:10 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 453 /2024

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –3

| | | | |
|---|---|---|---|
| Name: | கிங்ஸ்லி | Calling: | கார் மெக்கானிக் |
| Father's Name: | ஜேசுபாதம் | Religion: | |
| Village: | கஸ்பா பி | Age: | 42 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 18.11.2025 நேரம் : 01.15 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.3 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கபட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1 மற்றும் 2 எனக்கு தெரிந்தவர்கள். நான் எங்கு வேலை செய்து வருகிறேன் என்றால் ஆம்பூரில் வேலை செய்கிறேன். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய காரை யார் ஓட்டி வந்தார்கள், அதன் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் எனது முதன்மை விசாரணையில் வாகனத்தின் பதிவெண், காரை ஓட்டி வந்த நபர் பெயர் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அ.சா.2க்கு ஏற்பட்ட விபத்துக்காக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. அந்த இழப்பீட்டை பெற வேண்டும் என்பதற்காக தான் நான் அவர்களுக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. போலிசார்

என்னிடம் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கும் சுங்கசாவடிக்கும் இடையே 10 மீட்டர் இடைவெளி இருக்குமா என்றால் இல்லை 150 மீட்டர் இருக்கும். விபத்தானது சேகரின் அஜாக்கிரதையாலும் அவர் தீடிரென இறங்கியதால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) கிங்ஸ்லி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.18 18:28:16 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 453 /2024

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -4

| | | | |
|---|---|---|---|
| Name: | அருள்தாஸ் | Calling: | விவசாயம் |
| Father's Name: | பாலகிருஷ்ணன் | Religion: | |
| Village: | சாணங்குப்பம் | Age: | 56 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 18.11.2025 நேரம் : 01.25 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.4 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கபட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.2 எனது தங்கையின் கணவர், அ.சா.1 எனது தங்கை. விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசாரும், எனது தங்கையும், எனது தங்கையின் கணவரும் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விவாரித்து தனியாக ஏதும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரம் ஏதும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) அருள்தாஸ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.18 18:28:31 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 453 /2024

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –5

| | | | |
|---|---|---|---|
| Name: | ரமேஷ்பாபு | Calling: | விவசாயம் |
| Father's Name: | கோவிந்தன் | Religion: | |
| Village: | சாணங்குப்பம் | Age: | 57 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 18.11.2025 நேரம் : 01.30 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.5 மனுவின் பேரில் அழைத்து அனுமதிக்கபட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.2 எனது தங்கையின் கணவர், அ.சா.1 எனது தங்கை. விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசாரும், எனது தங்கையும், எனது தங்கையின் கணவரும் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விவாரித்து தனியாக ஏதும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரம் ஏதும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ரமேஷ்பாபு

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.18 18:28:23 +0530